புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஜூன் 08, 2023 • புரட்சி 23 • முழக்கம் 21 • விலை ரூ.3.00



# இந்தியாவில் ஏன் ரயில் விபத்துகள்?

## • நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தாததே காரணம்

டெல்லி: நவீன தொழில்நுட்பத்தை முழுமையாக பயன்படுத்தி ரயில் விபத்துகளை வளர்ந்த நாடுகள் தடுக்கும் நிலையில், ஒடிசா விபத்தால் இந்திய ரயில்வேயின் விபத்து தடுப்பு தொழில்நுட்பம் கேள்விக்குறியாகி உள்ளது. ஒடிசாவில் நடந்த கோர ரயில் விபத்தால், இந்திய ரயில்வேயின் பாதுகாப்பு திறன்கள் குறித்து கேள்விகள் எழுந்துள்ளன. இந்த விபத்தில் இதுவரை 300க்கும் மேற்பட்டோர் பலியானதாக கூறப்படும் நிலையில், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

ரயில் விபத்துக்கள், தடம் புரண்டது, ரயில்கள் மோதுவது உள்ளிட்ட காரணங்களால் உயிரிழப்புகள் நடப்பது வாடிக்கையாகிவிட்டது. நவீன தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்த இன்றைய காலகட்டத்தில், இதுபோன்ற விபத்துகளைத் தடுக்கும் திறன் இருந்தாலும் கூட, ரயில் விபத்துக்கள் மற்றும் மோதல்கள் அதிகரித்து வருகின்றன. இருந்தாலும் சில நாடுகள் ரயில் விபத்தை தடுக்கும் வகையில் உயர் தொழில்நுட்ப பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதனை செயல்படுத்துவதில் வெற்றியும் பெற்றுள்ளன.

திறமையான மற்றும் பாதுகாப்பான ரயில்வே கட்டமைப்புக்கு ஜப்பான் ரயில்வேயை கூறமுடியும். ரயில் விபத்துகளைத் தடுக்க பல்வேறு மேம்பட்ட தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகிறது. அதேபோல் ஜெர்மனி, தென் கொரியா, இங்கிலாந்து போன்ற நாடுகள் தானியங்கி தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, ரயில் விபத்துகளை பெருமளவில் தடுக்கின்றன. மேம்பட்ட தொழில்நுட்பங்கள், வலுவான பராமரிப்பு, திறன்மிக்க தகவல் தொடர்பு அமைப்புகள், அட்வான்ஸ் சிக்னலிங், விபத்து மோதல் தவிர்ப்பு அமைப்புகள், தானியங்கி தட ஆய்வு, மேம்பட்ட தகவல் தொடர்பு போன்றவற்றை கூறமுடியும்.

அட்வான்ஸ் சிக்னலிங் சிஸ்டம்: பெரும்பாலான வளர்ந்த நாடுகளில் இயக்கப்படும் ரயில்கள் நேர்மறை ரயில் கட்டுப்பாடு (பிடிசி) தொழில்நுட்பத்தின் அடிப்படையில், சமிக்ஞைகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த தொழில்நுட்பமானது, ரயில் இயக்கங்களைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் உதவும். இதற்காக ஜிபிஎஸ், வயர்லெஸ் கம்யூனிகேஷன், ஆன்போர்டு கம்ப்யூட்டர்கள் பயன்படுத்துகிறது. பிடிசி தொழில்நுட்பம் மூலம், ஒரு ரயிலில் இருந்து மற்றொரு ரயிலுக்கு இடையே நடக்கும் மோதல்கள், ரயில் தடம் புரண்டு செல்லுதல் ஆகியவற்றை தடுக்கிறது.

ரயில் மோதல் தவிர்ப்பு கருவி: ரயில் மோதல் தவிர்ப்பு அமைப்பு (டிசிஏஎஸ்) தொழில்நுப்பமானது, ரயில் பாதையில் இதர வாகனங்கள், பாதசாரிகள், விலங்குகள் கடந்தால் கூட கண்டறியும். ரேடார், லிடார் மற்றும் பிற சென்சார் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அறியப்படுகிறது. இந்த தொழில்நுட்பம் மூலம் ரயிலின் லோகோ பைலட்டுகளுக்கு சமிக்ஞைகள் அனுப்பி வைக்கப்படும். இதன்மூலம் ரயில் மோதல்களைத் தவிர்க்க முடிகிறது.

### பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்ட ஒரு இலட்சம் கோடியை செலவிடாத ரயில்வே துறை

2017 - 2018 ஆம் நிதியாண்டில் - ரயில்வே பாதுகாப்பை மேம்படுத்த ரூ.1 இலட்சம் கோடி நிதி ஒதுக்கப்பட்டது. அந்த நிதியை ரயில்வே துறை பயன்படுத்தவில்லை, இதை அடுத்த 5 ஆண்டுகளுக்கு நீட்டித்து இருப்பதாக கூறிவிட்டது. கடந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட ஒன்றிய கணக்கு தணிக்கை அறிக்கையில் [CAG] இது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தானியங்கி தடம் ஆய்வு: தானியங்கி தடம் ஆய்வு (ஏடிஐ) தொழில்நுட்பமானது, லேசர்கள் மற்றும் கேமராக்களை பயன்படுத்தி, டிராக் ஜியோமெட்ரி கார்கள், ரயில்வே தடத்தின் நிலைமைகளை மதிப்பிட முடியும். ஏதேனும் தவறுகள் நடந்தால் உடனடியாக கண்டறியலாம். இந்த கார்கள் டிராக் ரெக்கார்டிங் கார்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. இந்த தொழில்நுட்பத்தின் மூலம் உரிய நேரத்தில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு குறித்த தகவல்களையும் வெளிப்படுத்தும். இதனால் ரயில் பெட்டிகள் தடம் புரள்வதற்கான அபாயத்தை குறைக்கிறது.

விபத்து அபாயங்களைக் கண்டறிதல்: விபத்து அபாயங்களைக் கண்டறிய பல தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டாலும், இத்தகைய நுட்பங்களைச் செயல்படுத்துவது, ரயில்களால் ஏற்படும் தவறுகளை முன்கூட்டியே தெரிவித்துவிடும். ரயில்களின் வெப்பநிலை, அதிர்வு, கண்காணிப்பு அமைப்புகள் போன்ற சென்சார்களின் தரவை அடிப்படையில், இந்த தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக பராமரிப்பு பணிகளுக்கு இந்த தொழில்நுட்பம் உதவுகிறது.

மேம்பட்ட தகவல் தொடர்பு: வயர்லெஸ் தரவு நெட்வொர்க்குகள் மற்றும் நிகழ்நேர கருவிகள் உள்ளிட்ட நவீன தகவல்தொடர்பு அமைப்புகள், உரிய நேரத்தில் தகவல்கள் பரிமாற்றத்தை செயல்படுத்துகின்றன. அத்தகைய சூழ்நிலையில், அவசரகாலத்தில் உடனடி நடவடிக்கை எடுப்பதன் மூலம் விபத்தைத் தவிர்க்கலாம்.

மேற்கண்ட முறைகளில் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி விபத்து தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாலும், இந்தியா போன்ற நாடுகளில் ரயில்வே விபத்து தடுப்பு நடவடிக்கை என்பது கேள்வியாக உள்ளது. அதற்கு ஓர் உதாரணமாக ஒடிசா ரயில் விபத்து நம்முன் நிற்கிறது.

# பாஜகவின் மீது குவியும் பாலியல் குற்றச்சாட்டுகள்

ஒவ்வொரு விளையாட்டு வீரர்களும் நாட்டுக்காக பதக்கம் வென்று பெருமை சேர்க்க வேண்டும் என்பதை தங்களது இலக்காக கொண்டு விளையாடி வருகின்றனர். அதற்காக பல்வேறு தியாகங்களையும் விலையையும் கொடுத்து போராடுகின்றனர். ஒலிம்பிக்கில் தங்களது நாட்டைச் சேர்ந்த வீரர்கள் பதக்கம் வென்று சாதிக்க வேண்டும் என்று நினைக்கும் உலக நாடுகள் பல ஆயிரம் கோடியை செலவு செய்து வருகிறது.

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவரும், பாஜக எம்.பி யுமான பிரிஜ் பூஷன் சிங் மல்யுத்த வீராங்கனைகள் பலரை பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளார் என்பது மல்யுத்த வீராங்கனைகளின் குற்றச்சாட்டு. இவரால் பாதிக்கப்பட்ட வீராங்கனைகளில் 7 பேர் இவர் மீது டெல்லி கண்ணாட ப்ளேஸ் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர். பாஜக எம்பி என்பதால் வழக்கம்போல் புகாரைக் கிடப்பில் போட்டது டெல்லி காவல்துறை. நீதிமன்றம் தலையிட்ட பின்னர் தான் முதல் தகவல் அறிக்கையே பதிவு செய்யப்பட்டுள்ளது. அவரை கைது செய்ய வேண்டும், அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மல்யுத்த வீரர்கள் டெல்லி ஜந்தர் மந்தரின் முன்பு அமர்ந்து ஒரு மாதமாக போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தை மல்யுத்த வீரர்கள் சாக்சி மாலிக், தினேஷ் போகத், சங்கீதா போகத் மற்றும் பஜ்ரங் பூனியா ஆகியோர் முன்னின்று நடத்தினர். இவர்களது தலைமையின் கீழ் மல்யுத்த வீரர்கள் 100க்கும் மேற்பட்டோர் திரண்டு போராடினர்.

கடந்த 28ஆம் தேதி புதிய நாடாளுமன்ற கட்டிடத் திறப்பு விழாவின்போது, ஜந்தர் மந்தரில் இருந்து மல்யுத்த வீரர்கள் கூட்டமாக புறப்பட்டு நாடாளுமன்றத்தினை முற்றுகையிடப் போவதாக அறிவித்தனர். டெல்லி காவல்துறையினர் அவர்களை இழுத்துச் சென்று கைது செய்த விதம் நாடு முழுவதும் பதைபதைப்பை ஏற்படுத்தியது. பத்மஸ்ரீ என உயரிய விருதால் கவுரவிக்கப்பட்ட பஜ்ரங் பூனியாவை தரதரவென்று ரோட்டில் இழுத்துச் சென்று வேனில் தள்ளினர். அர்ஜுனா விருது முதல் ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது வரை வாங்கிய மற்ற வீரர்களுக்கும் இதே நிலைதான். போராடியவர்கள் மீது உடனடியாக பல்வேறு பிரிவுகளில் வழக்கு பதிவு செய்தது டெல்லி காவல்துறை, ஆனால் பாலியல் குற்றசாட்டுக்கு ஆளான பிரிஜ் பூஷன் சிங் மீது மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் வேறு வழியின்றி வழக்கு பதிவு செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நடவடிக்கை எடுக்க மறுக்கும் ஒன்றிய அரசின் போக்கு ஒரு புறம் தொடர்கிறது. அதனாலயே உலக அரங்கில் நமது நாட்டின் மானம் பஞ்சாய் பறக்கிறது. தற்போது உலக மல்யுத்தக் கூட்டமைப்பு இந்திய மல்யுத்தக் கூட்டமைப்புக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே எச்சரிக்கை விடுத்துள்ளது. மல்யுத்த வீரர்களின் போராட்டம் நியாயமானது என்று இந்த கூட்டமைப்பு அதிகாரப்பூர்வமாக அறிவித்து விட்டது. இது போராடும் வீராங்கனைகளுக்கு கிடைத்துள்ள தகுதியான அங்கீகாரம் என்று உலக நாடுகள் கருதுகின்றனர்.

**மேசையில் உறங்கும் விசாரணை அறிக்கை;**

வீரர்களின் போராட்டத்திற்கு தீர்வு காண்பது போல் ஒரு பிம்பத்தை ஒன்றிய விளையாட்டு துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் உருவாக்கினார், பாலியல் குற்றச்சாட்டுக் குறித்து விசாரிக்க மேரிகோம் தலைமையில் 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

### தலையங்கம்

## தொடர்வண்டித் துறையில் 'நவீனத் தீண்டாமை'

ஒடிசா இரயில் விபத்து நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது. மிகக் கொடூரமான இரயில் விபத்தாக இது அமைந்துவிட்டது. 300க்கும் மேற்பட்ட உயிர்கள் இதுவரை பலியாகி விட்டன. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த தொடர்வண்டி சமூகத்தில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தது. சமூகத்தினுடைய மக்களின் அசைவியக்கங்களை அது துரிதப்படுத்தியது. அதுமட்டுமல்லாமல் சாதி, மத, வர்ணாசிரம பேதம் இல்லாமல் அனைத்து சாதியினரையும் அனைத்து மதத்தினரையும் சுமந்து செல்கின்ற ஒரு வாகனமாக அது மாறியது.

பிரிட்டிஷார் அறிமுகப்படுத்திய தொடர் வண்டி மற்றும் நவீன தொழிற்சாலைகள் காரணமாக இந்தியாவில் தேக்கமுற்றுக் கிடந்த சமுதாயம் உடையத் தொடங்கியது என்றார் காரல் மார்க்ஸ். தேக்கமுற்ற சமுதாயம் என்பதை விளக்க வேண்டுமானால் பார்ப்பன அதிகார கட்டமைப்பு சமுதாயம் உடையத் தொடங்கியது என்பதே ஆகும். இந்த பார்ப்பன அதிகார கட்டமைப்பு சமுதாயத்தினால் உலகில் ஏனைய நாடுகளில் நிகழ்ந்ததைப் போல இங்கே நில உடைமை முதலாளித்துவ சமூகங்கள் உருவாகவில்லை. மார்க்சிய மொழியில் கூற வேண்டுமானால் உற்பத்தி உறவுகள் பார்ப்பனர்களுக்கு சாதகமாகவே இருந்தன, இதுவே சமூக மாற்றத்தை தேங்க வைத்தது. தொடர்வண்டி அஞ்சல் துறை மற்றும் நவீன தொழில் சாலைகளை பிரிட்டன் அறிமுகப்படுத்திய போது தான் இந்த தேக்கம் உடைய தொடங்கியது. தொடர் வண்டி அறிமுகப்படுத்தப்பட்ட போது பார்ப்பனர்கள் தங்களுக்கென்று தனிப்பெட்டிகளை சேர்க்க வேண்டும் என்று பிரிட்டிஷாரிடம் மனு கொடுத்தனர், அதை பிரிட்டிஷார் ஏற்கவில்லை. தொடர்வண்டி நிலைய உணவு விடுதிகளில் பார்ப்பனருக்கு தனி சாப்பாட்டு அறைகள் நீண்ட காலம் தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டது, பெரியார் நடத்திய போராட்டத்தினால் தான் இந்த பேதம் ஒழிக்கப்பட்டது கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் "நல்ல தம்பி" திரைப்படத்தின் கிந்தன் கதை உரையாடலை இணைத்தார். அதில் மரக்கட்டையான தொடர்வண்டி சாதி, மதம் பார்க்கவில்லை. அனைவரையும் ஏற்றிச் சென்றது, மனிதர்கள் தான் பார்க்கிறார்கள் என்ற கருத்தைப் பாடலாக பாடுவார்.

ஆனால், சமத்துவத்தைக் கொண்டு வந்த அந்த இரயில் பிற்காலத்தில் சமத்துவதற்கு எதிரான பேதங்களை உருவாக்குகிற ஒரு கட்டமைப்பாக மாறிப் போய் விட்டது. இராஜஸ்தானின் சதாப்தி விரைவு இரயில்கள் வி.ஐ.பி என்ற அந்தஸ்தைப் பெற்று இருக்கின்றன. ஏனைய எக்ஸ்பிரஸ் இரயில்களுக்கு இத்தகைய அந்தஸ்து கிடையாது. இந்த அந்தஸ்தைப் பெற்ற இரயில்களுக்கு எல்.எச்.பி என்ற நவீன பாதுகாப்புக் கட்டமைப்பு உண்டு. இரயில்கள் தடம் புரண்டாலும் அதனுடைய தாக்கத்தை உள்வாங்கி பயணிகளை காப்பாற்றுகின்ற கட்டமைப்பு இந்த வி.ஐ.பி எக்ஸ்பிரஸ் இரயில்களுக்கு மட்டுமே இருக்கிறது.

இந்த இரயில்கள் புறப்படுவதற்கு முன்பு கட்டாயமாக தண்டவாளங்கள் சோதனையிடப்படுகின்றன. ஆனால், ஏனைய எக்ஸ்பிரஸ் இரயில்களுக்கு இந்த வாய்ப்பு வசதிகள் மறுக்கப்பட்டு வருகிறது. அதைப்போல் கவாச் என்று சொல்லப்படுகின்ற ஒரு பாதுகாப்பு தொழில்நுட்பம் இரயில்வே வடிவமைப்பு ஆராய்ச்சி நிறுவனம் உருவாக்கிய இந்த தொழில்நுட்பம் தமிழில் சொல்லவேண்டும் என்றால் கவசம் என்ற பொருளைக் கொண்டது. அது கவாச் என்று இந்தி மொழியில் அழைக்கப்படுகிறது.

ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் மம்தா பேனர்ஜி இரயில்வே துறை அமைச்சராக இருந்தபோது இந்த பாதுகாப்பு திட்டத்தை அவர் அறிமுகப்படுத்தினார். இந்த திட்டத்தின் வழியாக இரண்டு இரயில்கள் நேருக்கு நேர் மோதிக் கொள்கிற ஆபத்துகள் உருவாகிற போது 380 மீட்டருக்கு முன்பே இரயில் எஞ்ஜின்கள் தானாகவே நின்றுபோய் விடும். இந்த பாதுகாப்பு அனைத்து இரயில் பாதைகளிலும் உருவாக்கப்பட்டு இருக்க வேண்டும். 70,000 கி.மீ இரயில் பாதையில் இதுவரை 1,500 கி.மீட்டருக்கு மட்டும் தான் இந்த பாதுகாப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டு இருக்கிறது. இந்த ஒடிசா இரயில் விபத்துக்கு உள்ளான இரயிலும் இப்படியொரு பாதுகாப்பு அமைப்பு இருக்குமென்று சொன்னால் இந்த விபத்துகளை நிச்சயமாக தவிர்த்து இருக்க முடியும். நேருக்கு நேர் மோதிக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது.

இதற்கு பெரும் தொகை செலவிடப்பட வேண்டியிருக்கிறது என்று ஒன்றிய ஆட்சி கூறுவதில் எந்த நியாயமும் இல்லை. மக்களுடைய உயிர்களை பாதுகாப்பதை விட அரசுக்கு செலவு செய்வதற்கு வேறு என்ன வேலை இருக்கிறது. அண்ணாமலை, பழனிசாமி போன்றவர்கள் நடத்துகிற அற்ப அரசியலைப் போல் அல்லாமல் தமிழக முதலமைச்சர் உடனடியாக தமிழ்நாட்டில் இருந்து தமிழ்நாட்டைச் சேர்ந்தோரை மீட்கின்ற பணியில் துரிதமாக ஈடுபட்டு இருக்கிறார். அமைச்சர்கள் குழு ஒன்றையும், அதிகாரிகள் குழு ஒன்றையும் அமைத்து ஒடிசா முதல்வரிடம் பேசி அவர்களை தமிழ்நாட்டிற்கு மீட்டுக் கொண்டு வருகிற நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருக்கிறரே தவிர இதை அரசியல் ஆக்குகின்ற எந்தவொரு கருத்தையும் அவர் முன்வைக்கவில்லை.

சாதி,மத, வர்ண தீண்டாமையை ஒழிக்க வந்த இரயிலின் கட்டமைப்பில் இப்படி வி.ஐ.பி அந்தஸ்து, வி.ஐ.பி அல்லாத அந்தஸ்து என்ற இரு பிரிவினை உண்டாக்கி சில பிரிவுகளுக்கு மட்டும் பாதுகாப்புகளை ஏற்படுத்துவதும் பாதுகாப்பு கட்டமைப்பு வசதிகளை அனைத்து இரயில் பாதைக்கும் செய்து முடிக்காமலும் இருப்பது மற்றொரு வர்ணாசிரம கொள்கைதான் என்று நாம் கூறவேண்டி இருக்கிறது. எதிர்காலத்திலாவது இந்த முறைகள் அகற்றப்பட்டு மக்களுடைய உரிமைகள், உயிர்கள் பாதுகாக்கப்படும் என்று நம்புவோமாக

## சோதிடத்தையும் சட்டத்தையும் இணைத்து தீர்ப்பு வழங்கிய அலகாபாத் உயர்நீதிமன்றம் ; உச்சநீதிமன்றம் கண்டனம்

உத்திரபிரதேசத்தில் ஒரு நீதிபதி சட்டத்தையும் சோதிடத்தையும் ஒன்றாக இணைத்து தீர்ப்பு ஒன்றை வழங்கியிருக்கிறார். சமூக வலைதளங்களில்பெரும்சர்ச்சையைஉருவாக்கியஇந்ததீர்ப்புஉச்ச நீதிமன்றத்தின் கவனத்திற்கு வந்தது. பாலுறவு வன்கொடுமைக்கு உள்ளான ஒரு பெண் நீதி கேட்டு அலகாபாத் உயர் நீதிமன்றத்தை நாடினார், அலகாபாத் நீதிபதி அந்த பெண்ணை பாலுறவுக்கு உள்ளாக்கியவன் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று ஒரு தீர்ப்பை வழங்கினார். குற்றம் சாட்டப்பட்டவர் பெண்ணுக்கு செவ்வாய் தோஷம் இருக்கிறது, எனவே நான் திருமணம் செய்து கொள்ள முடியாது என்று கூறிவிட்டார். அதற்குப் பிறகு அந்த நீதிபதி அலகாபாத் பல்கலைக்கழகத்தின் சோதிடத் துறைக்கு இரண்டு பேர் ஜாதகத்தை எடுத்துச் சென்று அந்த பெண்ணுக்கு செவ்வாய் தோஷம் இருக்கிறதா இல்லையா என்பதை கண்டறிந்து அதன் பிறகு முடிவு செய்யுங்கள் என்று ஒரு வினோதமான தீர்ப்பை கொடுத்து விட்டார்.


இந்த தீர்ப்பை சமூக வலைதளங்களில் பார்த்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திர சூட் அவசர அவசரமாக நீதிபதிகள் குழு ஒன்றை அமைத்து இந்த வழக்கை விசாரிக்க உத்தரவிட்டார். நீதிபதிகள் குழு சட்டத்தையும் சோதிடத்தையும் இணைக்கின்ற அலகாபாத் உயர்நீதிமன்றதிற்கு கடும் கண்டனத்தை தெரிவித்து இருக்கிறது.

அரசு வழக்கறிஞர் இந்த தீர்ப்பை உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டும் என்று வாதிட்டார், அதனைத் தொடர்ந்து அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு நிறுத்தி வைக்கப்பட்டு பல்கலைக்கழகத்தின் சோதிடத் துறை இந்த பஞ்சாங்கத்தை பார்க்க கூடாது என்றும் தடை விதித்து இருக்கிறது. உத்தர பிரதேச மாநிலம் எவ்வளவு பிற்போக்குத்தனமாக இருக்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணம்.

மூடநம்பிக்கைகளும் அறிவியலுக்கு எதிரான சிந்தனைகளும் நிறைந்த ஒரு மாநிலமாக உத்தரப் பிரதேசம் இருப்பதன் காரணமாகத் தான் இத்தகைய நீதிபதிகள் உயர்நீதிமன்ற பதவிகளில் வந்து அமர்ந்து கொண்டு மூடநம்பிக்கைக்கு சட்ட முலாம் பூசிக்கொண்டு இருக்கிறார்கள் இந்த தீர்ப்பு சட்டத்தை அதன் நோக்கங்களை கேலிக்குரியதாகிவிட்டது.

இனி திருட்டு வழக்குகள் கூட இத்தகைய நீதிபதிகளுக்கு முன் வந்தால் அவர்கள் மந்திரவாதிகளிடம் போய் கேட்டுப்பாருங்கள், வெற்றிலையில் மை போட்டு பாருங்கள் என்றெல்லாம் தீர்ப்பு கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. கொலை வழக்குகள் வந்தால் அது அவருடைய முன் ஜென்மத்தின் பலன் என்று தீர்ப்பு கூறினாலும் வியப்பு இல்லை. இந்துத்துவா ஆட்சியில் நாடு எவ்வளவு பிற்போக்குத்தனமாக போய்க்கொண்டிருக்கிறது என்பதற்கு அலகாபாத் உயர்நீதி மன்ற நீதிபதியின் இந்த தீர்ப்பு ஒரு சாட்சியமாகும்.

## சைவம் - வைணவம்



சைவம், சிவம், ஆகமம், தேவாரம், திருவாசகம் என்கிற வார்த்தைகளும் ஆரியத்தை அடிப்படையாகக் கொண்டவை என்னும் வழக்கை சுலபத்தில் தள்ளிவிட முடியாது மற்றும் சைவக் கடவுள்கள் பெயரும் கடவுளின் பெண் சாதிப் பிள்ளைகளின் பெயரும் அனேகமாய் முழுதும் ஆரிய மொழிப் பெயர்களே தவிர வேறில்லை. மற்றும் அப்பெயர்களுக்கு ஏற்ற காரணங்களும் அக் காரணங்களுக்கு ஆரியர்களால் கற்பிக்கப்பட்ட கதைகள் தாம் ஆதாரமேயொழிய வேறில்லை மற்றும் அப் பெயர்களுக்கும் கதைகளுக்கும் ஏற்படுத்தப்பட்ட புராணங்கள் என்பதும் பெரிதும் ஆரிய மூலத்திலிருந்து மொழி பெயர்த்ததாக சொல்லப்படுபவைகளே அல்லாமல் வேறு இல்லை.

சைவம் என்கிற பெயரும், சிவன் என்றால் அன்பு என்கின்ற வியாக்கியானமும் கூட ஆரிய கொள்கைகளை சிறப்பாகவே ஆபாசங்களையும், வேள்விக் கொடுமைகளையும் முறையே வெளியாக்கியும் ஒழிக்கவும் வந்த புத்த இயக்கத்தை எதிர்த்து அவரது கொள்கையை ஒழிக்கவே சைவம் என்பதாக ஒன்று கற்பிக்கப்பட்ட தே தவிர மற்றபடி அச் சைவம் என்பதற்கும் அதன் கொள்கைகளுக்கும் அதில் காணப்படும் பல்வேறு கடவுள்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் தமிழ் மக்களுக்கோ எவ்விதச் சம்பந்தமும் இருப்பதாகவோ இதுவரை எவ்வித ஆதாரமும் வெளிப்படுத்தப்படவில்லை.

குடிஅரசு 7.4.1929

# சமத்துவபுரம் - டைடல் பார்க் - இரண்டுமே தேவை

**ஏ.எஸ். பன்னீர்செல்வம்**



சமத்துவபுரம், டைடல் பார்க் [தொழில்நுட்பப் பூங்கா] இரண்டுமே ஒரே நேரத்தில் தொடங்கப்பட வேண்டும் என்பதே பெரியார், அண்ணா பார்வை, என கலைஞர் கூறினார்

கடந்த இரண்டு ஆண்டுகளாக என்னைச் சந்திக்கும் பத்திரிகையாளர்களும் கல்வியாளர்களும் கலைஞரின் வாழ்க்கை வரலாற்றை நான் எழுதுவதற்கான காரணம் என்னவென்று தொடர்ந்து கேட்டுவருகின்றனர். ஒரு தேசத்தை உருவாக்குவதில் இரண்டு விதமான கற்பனைகள் உண்டு: ஒரு கற்பனைக்கு Holding together என்றும் மற்றொரு கற்பனைக்கு Coming together என்றும் அரசியல் விஞ்ஞானத்தில் கூறப்படுகிறது.

இதில் Holding together என்ற கருத்தாக்கத்தில் அரசு இயந்திரத்துக்கும் பாதுகாப்புத் துறைக்கும் அதிக முக்கியத்துவம் அளித்து, மக்களுக்கான அதிகாரம் மற்றும் உரிமைகள் இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்படுகின்றன. ஆனால், Coming together என்ற கருத்தாக்கத்தில் சாமானிய மக்களின் உரிமைகள், எதிர்பார்ப்புகள் முதலியவை முக்கியத்துவம் பெற்று, அரசு இயந்திரம் மக்களின் உரிமைகளை நிறைவேற்றும் ஒரு கருவியாக மாறுகிறது.

கலைஞரின் செயல்திட்டம்: அதிகாரக் குவிப்பில் நம்பிக்கை உடைய கட்சிகள் அனைத்தும் Holding together மரபில் வந்தவையாக இருக்கின்றன. நவீன இந்தியாவில் Coming together தத்துவத்தை முன்வைத்தது மட்டுமல்லாமல், அதற்கான செயல்திட்டத்தையும் அளித்த தலைவர் கலைஞர். இதற்கான பதிவுகள் 1942இல் தொடங்கி, மறையும் வரையில் அவர் எழுதிய எழுத்துகளில் விரிவாகக் காணப்படுகின்றன. 1974இல் சட்டமன்றத்தில் முதலமைச்சராக மாநில சுயாட்சித் தீர்மானத்தை முன்மொழிந்து கலைஞர் ஆற்றிய உரையைத் தமிழர்கள் அனைவரும் படிப்பது அவசியம்.

அந்த உரையில் மாநில உரிமைகள் பற்றி மட்டுமல்லாமல், மத்தியில் ஏற்படக்கூடிய விரும்பத்தகாத மாற்றங்களைப் பற்றி ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் கலைஞர் விவரிக்கிறார். ஜனநாயக மாண்புகளுக்கு மத்திய அரசு ஒரு பெரும் சவாலாக மாறக்கூடிய அபாயத்தை நரேந்திர மோடி பிரதமர் பதவிக்கு வருவதற்கு 40 ஆண்டுகளுக்கு முன்பே சட்டமன்றத்தில் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளார் கலைஞர். அந்தப் பேச்சிலிருந்து சில துளிகளைப் பார்ப்போம்:

“உடனடியாக நாளைக்கே மத்திய அரசு நடைமுறைக்குக் கொண்டுவந்து, மாநில சுயாட்சி தந்துவிடும் என்கிற அந்த அவசரமான நம்பிக்கையோடும் இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டுவரவில்லை. இந்தியாவில் தோன்ற இருக்கின்ற ஜனநாயகப் புரட்சியினுடைய தோற்றுவாயாக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிற நாளாக இருக்கும் என்ற கருத்தின் அடிப்படையிலேதான் அந்தத் தீர்மானத்தை இங்கே ஆளும் கட்சியின் சார்பாக - இந்தப் பேரவையில் முன்வைத்திருக்கிறோம்.”

வரலாற்றை வறட்டுத்தனமாக முன்வைத்து நடைபெறும் சிந்தனைகளுக்கு உதவாத கருத்துகளை வரலாற்று உதாரணங்களுடன் கலைஞர் சட்டமன்றத்தில் அந்தப் பேருரையில் சுக்குநூறாக உடைத்தார்; அவர் பேசியதாவது:

“வரலாற்றை மட்டுமே வைத்து இப்போது சொல்கிற எல்லா விஷயங்களுக்கும் தவறாகக் கருத்துகளைக் கற்பிக்கக் கூடாது. போர், போர் என்று அலைந்த அசோகன் களம் பல கண்டான், அவனுடைய கட்டாரி பட்டு ஆயிரக்கணக்கானவர் பிணமாயினர். அவனுடைய ரத, கஜ, துரக, பதாதி படைகளின் ஆர்வத்தால், வேகத்தால் சரிந்துபோன சாம்ராஜ்யங்கள் எத்தனையோ! கலிங்கம் வரை சென்றான். கலிங்கத்திலே களம் கண்டான்.

அங்கே பிணக் குவியல்களைப் பார்த்தான், அதற்குப் பிறகு நான் இனிமேல் போர் புரியமாட்டேன், நான் இனிமேல் பௌத்தன் என்றவுடனே அவனை, ‘உன்னுடைய பழைய வரலாறு போர் வரலாறு, ஆகவே ஒப்புக்கொள்ள மாட்டேன், நான் உன்னை ஏற்றுக்கொள்ள மாட்டேன்’ என்று அன்றைய இந்தியா சொல்லியிருந்தால், இன்று இந்தியக் கொடியிலே அசோகச் சக்கரம் பொறிக்கப்பட்டிருக்க முடியாது. இன்றைக்கு அசோகச் சின்னம் நம்முடைய இந்தியா வலுவடைய தேசியச் சின்னமாக ஆகியிருக்காது. வழிப்பறிக் கொள்ளையடித்த ரட்சன் வால்மீகியாகி ராமாயணம் எழுதினான், அவனை ஒத்துக்கொண்டீர்கள், எங்களை ஒத்துக்கொள்ளக் கூடாதா?”

வரலாற்றை முன்கணித்தல்: அதிகாரக் குவிப்பு என்பது நேரு, பட்டேல் ஆட்சியிலிருந்து மோடி, அமித்ஷா ஆட்சிக்கு வழிவகுக்கும் என்பதை அன்றே கலைஞர் கணித்திருந்தார். 1974 சட்டமன்ற விவாதத்தில் அவர் சுட்டிக்காட்டிய எச்சரிக்கையை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்: “மாநிலத்தில் ஒரு முன்னேற்ற சர்க்கார் வந்து, முற்போக்கான சமதர்மத் திட்டத்தை நிறைவேற்றுகிற சர்க்காராக, இன்னும் தீவிர சர்க்காராக அமைந்து, அதற்கு நேர்முகமாக மத்திய அரசு ஒரு சனாதன சர்க்காராக, பிற்போக்கு சர்க்காராக அமைந்தால் அப்பொழுது நிலைமை என்ன?”

நீட் மரணங்கள் நிகழும் இந்தக் காலகட்டத்தில், வரம்பை மீறிச் செயல்படும் ஆளுநர்கள் விரவியிருக்கும் சூழலில், கலைஞரின் இந்த உரை ஒரு பெரிய ஜனநாயகக் கேடயமாக விளங்குகிறது. பத்திரிகையாளன் என்ற முறையில் கலைஞருடன் உரையாடுவது ஒரு பெரும் கற்றல் அனுபவம்தான்.

அவர் பயன்படுத்திய உருவகங்களும் படிமங்களும் கடினமான அரசியல் கருத்துகளை அனைவரும் புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் சரளமாக வந்துவிழும். அரசியல் வாழ்க்கையில் எதிர்த்துச் செயல்படுதல், சமாதானமாகச் செல்லுதல் என்ற இரண்டு பாதையைப் பற்றிக் கூறும்போது ‘வாளும் கேடயமும்’ என்ற உருவகத்தை முன்வைத்துப் பேசினார்.

“நல்ல அரசியலில் நேரத்துக்கு ஏற்றாற்போல் வாளைப் பயன்படுத்த வேண்டும், அவசியம் ஏற்பட்டால் கேடயத்தைப் பயன்படுத்த வேண்டும். கேடயத்தைப் பயன்படுத்துவதால் கோழை என்ற முடிவுக்கு வர வேண்டிய அவசியம் இல்லை, உயிருடன் இருந்தால்தான் முற்போக்கு அரசியலில்மாற்றங்களைக் கொண்டுவர முடியும். இதைத்தான் நம் முன்னோர்கள் அன்றே, ‘சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்’ என்று கூறியிருக்கிறார்கள்.”

1996-2001 ஆண்டு காலத்தில் அவர் முதலமைச்சராக இருந்தபோது சமத்துவத்தை முன்னிறுத்தவும் சாதி, மத பேதங்களைக் களையவும் தமிழ்நாட்டில் சமத்துவபுரங்களை உருவாக்கினார். அப்போது அவருடன் பேசும்போது, சுயமரியாதை அரசியலில் நீட்சியான அவருக்கும் மற்ற அரசியல் பாதைக்கும் உள்ள வித்தியாசத்தை மிகத் தெளிவாக எடுத்துச்சொன்னார்: “சிலருக்குப் பொருளாதார முன்னேற்றம்தான் முக்கியம், சிலருக்குச் சமுதாய மாற்றம் தான் முக்கியம், சிலருக்குத் தொழிலாளர் உரிமைதான் முக்கியம். ஆனால் சுயமரியாதை, சமதர்மம் என்பதில் நம்பிக்கை உடையவனுக்குச் சமத்துவபுரமும் டைடல் பார்க்கும் ஒரே நேரத்தில் உருவாக்க வேண்டிய பார்வை கிடைக்கும். இந்தப் பார்வைதான் அய்யாவிடம் இருந்தும் அண்ணாவிடம் இருந்தும் நான் கற்றுக்கொண்ட பாடம்.”

இன்னும் ஒரு நூற்றாண்டு: கலைஞரன் வாழ்க்கை நமக்களிக்கும் முக்கியப் பாடம் நம்பிக்கைதான். திராவிட இயக்கத்தில் கலைஞர் பங்குபெற்ற காலத்தில் அதிலிருந்த மற்ற அனைவரும் - அண்ணா, நெடுஞ்செழியன், அன்பழகன், மதியழகன், அரங்கண்ணல், இரா. செழியன் உள்ளிட்ட பலர் - முதுகலைப் பட்டதாரிகள். ஆனால், கலைஞரோ பள்ளிக் கல்வி மட்டுமே முடித்திருந்த ஒருவர்.

எழுத்தாற்றலிலும் பேச்சாற்றலிலும் இவர்கள் யாருக்கும் சளைத்தவராக அவர் இல்லை. அதேபோல், அவர் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் பணியாற்றிய காலத்தில் அவரைவிட அதிக உலக அனுபவம் பெற்றவர்களாக இருந்தவர்கள்தான் தயாரிப்பாளர் டி.ஆர்.சுந்தரமும் இயக்குநர் எல்லீஸ் டங்கனும்.

இருவரும் உலகம் முழுவதும் பயணித்தவர்கள்; ஹாலிவுட்டிலும் பல்வேறு ஐரோப்பிய ஸ்டுடியோக்களிலும் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை நேரில் பார்த்துத் தொழில்நுட்பத்தைக் கற்றவர்கள். ஆனால், கலைஞர், திருவாரூரில் இருந்து பாண்டிச்சேரி, ஈரோடு வழியாக சேலம் சென்றடைந்தவர்.

உலகம் சுற்றிய அந்த இரண்டு ஆளுமைகளுக்கு நிகராய்த் திரைப்பட அறிவை அவர் பெற்றிருந்தார். பேனா, நாக்கு என்ற இரண்டே இரண்டு மூலதனத்தைக் கொண்டு வாழ்க்கையின் உச்சத்துக்கு ஒருவர் செல்ல முடியும் என்பதற்கான நம்பிக்கையின் அடையாளம்தான் கலைஞர்.

இந்த நம்பிக்கைக்குப் பின்னிருப்பது மக்கள்மீதான அசாத்தியமான அன்புதான். இந்த அன்புதான் கலைஞரின் அரசியல் உலகத்தை மட்டுமல்லாமல், படைப்புலகத்தையும் தீர்மானித்தது. அதனால்தான் சாதிக் கொடுமைகளுக்கு எதிரான உருவகமாக ராமானுஜரைப் பார்த்து, தன்னுடைய கடைசிப் படைப்பாய் ‘ராமானுஜர்’ தொலைக்காட்சித் தொடரை உருவாக்கினார். அரசியலிலும் படைப்புலகத்திலும் கலைஞர் ஏற்படுத்திய மாற்றங்களை முழுமையாகப் புரிந்துகொள்ள இன்னும் ஒரு நூற்றாண்டு ஆகுமெனத் தோன்றுகிறது.

ஜூன் 03: கலைஞர் நூற்றாண்டுத் தொடக்கம்

**[கட்டுரையாளர் – கலைஞர் வரலாற்றை எழுதியவர்**
**கட்டுரை, இந்து தமிழ்]**

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

## மேல்பாதி – திரௌபதி கோயிலில் பட்டியல் சமூகத்தின் நுழைவு உரிமை மறுப்பைக் கண்டித்து

# மதுரையில் கழகம் ஆர்ப்பாட்டம்



விழுப்புரம் மேல்பாதி திரெளபதி கோவிலில் பட்டியல் சமூக மக்களின் வழிபாட்டு உரிமையை மறுக்கும், ஜாதி வெறியர்களை கண்டித்தும், இந்து அறநிலையத்துறையின் கீழுள்ள அனைத்து கோவில்களிலும் அனைத்து மக்களுக்குமான வழிபாட்டு உரிமைகளை நிலை நிறுத்திட கோரியும்.

மதுரை திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் மா.பா.மணிஅமுதன் தலைமை தாங்கினார்.மேலூர் பொறுப்பாளர் சத்திய மூர்த்தி முன்னிலை வகித்தார்.

தலைமைக்குழு உறுப்பினர் அய்யனார், விடுதலை சிறுத்தைகள் துணைப் பொதுச்செயலாளர் வெ.கனியமுதன், தமிழ்தேசியப் புலிப்படைத் தலைவர் ஆ.முத்துப்பாண்டி, மக்கள் தமிழகம் கட்சி பொதுச்செயலாளர் நிலவழகன், மக்கள் சட்ட உரிமை இயக்கம் அண்ணாத்துரை, புரட்சிகர இளைஞர் முன்னணி குமரன், நிலக்கோட்டை வீர லட்சுமி, “உயர்நீதி மன்றத்தில் தமிழ் போராட்டக்குழு” ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் பகத்சிங், தமிழ்தேச குடியரசு இயக்கம் மெய்யப்பன், தபெதிக தமிழ் பித்தன், கடலூர் மாவட்டச் செயலாளர் சிவகுமார் உள்ளிட்ட தோழர்கள் கண்டன உரையாற்றினார்கள்.

யோகேஸ், வேங்கைமாறன், குமார், விஜய் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர். புலிப்பட்டி கருப்பையா நன்றியுரை கூறினார்.

# தீண்டாமைப் பட்டியல் : ஈரோடு தெற்கு மாவட்டம் களமிறங்குகிறது



ஈரோடு தெற்கு மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் மே 26, மாலை 6 மணியளவில் மாவட்டச் செயலாளர் எழிலன் தலைமையில் நடைபெற்றது. இதில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஏப்ரல் 29.30 ஆகிய தேதிகளில் சேலத்தில் நடைபெற்ற இது தமிழ்நாடு இளம் தலைமுறையின் எச்சரிக்கை மாநாடு மிக எழுச்சியோடு நடைபெற உழைத்திட்ட அனைத்து தோழர்களுக்கும் கூட்டம் பாராட்டுதலையும் நன்றியும் தெரிவித்துக் கொள்கிறது.

மே 21-இல் சேலத்தில் கூடிய தலைமை செயலவை கூட்டத்தில் தலைமை அறிவித்த வைக்கம் போராட்டம் இன்னும் முடியவில்லை . இன்றும் தொடரும் தீண்டாமையை கணக்கெடுக்கும் பணியை இரண்டு குழுவாக பிரிந்து ஜூன் 04,05 ஆகிய தேதிகளில் கிராமப்புரங்களில் நிலவும் தீண்டாமையை கணக்கெடுத்து தலைமைக்கு தெரிவிப்பது.

“எது திராவிடம்? எது சனாதனம்?” என்ற தலைப்பில் ஈரோடு புறநகர் பகுதிகளில் 25 கூட்டங்களும், மாநகரப் பகுதிகளில் 25 கூட்டம் என 50 கூட்டங்கள் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

தெருமுனைக் கூட்டங்களின் நிறைவுக் கூட்டம் ஈரோடு மாநகரில் பொதுக்கூட்டமாக கழகத் தலைவரை அழைத்து நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டது.

கலந்துரையாடல் கூட்டத்திற்கு வர இயலாத தோழர்களையும், நம்மோடு விலகியிருக்கும் தோழர்களையும் இணைத்துக்கொண்டு செயல்படவேண்டுமாய் இக்கூட்டம் வேண்டுகோள் விடுக்கிறது.

# முடக்கப்பட்ட விசாரணை அறிக்கைகள்

*1 ஆம் பக்கம் தொடர்ச்சி*

*இந்த குழு வீரர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரிடம் விசாரணை நடத்தியது. அதன் பிறகு அறிக்கையையும் விளையாட்டு அமைச்சகத்திடம் சமர்ப்பித்தது. ஆனால் அறிக்கையின் அடிப்படையில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, அறிக்கை இன்று வரை அமைச்சகத்தின் மேசையில் தூங்கிக் கொண்டிருக்கிறது.*

**பாஜகவும் பாலியல் குற்றச்சாட்டுகளும் ;**

*உத்தரகாண்ட் மாநிலத்தில் பாஜக தலைவர் வினோத் ஆர்யாவின் மகன் பல்காரியா கடந்த ஆண்டு அக்டோபரில் தனது அலுவலகத்தில் பணியாற்றிய பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்தார். இதை வெளியே சொல்ல கூடாது என தனது டிரைவரையும் கடுமையாக தாக்கினார். மற்றும் அவரது தந்தை மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.*

- *கடந்த 2018ல் முன்னாள் ஒன்றிய பாஜக அமைச்சர் எம். ஜே அக்பர் மீது ஆறு பெண் பத்திரிக்கையாளர்கள் பாலியல் குற்றச்சாட்டு கூறினர். கொல்கத்தாவில் பேட்டி தருகிறேன் என்று கூறி ஓட்டலுக்கு வரவழைத்து பாலியல் பலாத்காரம் செய்தார் என்ற குற்றச்சாட்டின் மீது ஈரத் துண்டை போட்டு வெற்றிகரமாக மறைத்து விட்டது மோடி தலைமையிலான ஒன்றிய அரசு.*

- *அரியானா மாநில பாஜக தலைவர் சுபாஷ் பராலாவின் மகன் விகாஸ் பராலா. [இவரும் பாஜகவில் பொறுப்பில் இருந்தார்] தனது நண்பர் ஆசிஷ் குமாருடன் சேர்ந்து IAS அதிகாரியின் மகளை பாலியல் வல்லுறவுக்கு வற்புறுத்தி அடித்து உதைத்தார். இந்த சம்பவம் கடந்த 2017 ஆகஸ்ட் நடந்தது. அக்டோபரில் அவரும் அவரது நண்பரும் கைது செய்யப்பட்டனர். பின்னர் அந்த வழக்கு நீர்த்துப் போக செய்யப்பட்டது.*
- *அரியானாவின் முன்னாள் பாஜக அமைச்சரும், மாநில ஹாக்கி அணியின் முன்னாள் கேப்டனுமான சந்திப் சிங் பாலியல் குற்றச்சாட்டில் சிக்கினார். கடந்த ஆண்டு செப்டம்பரில் தடகள வீராங்கனைக்கு பயிற்சிக் கொடுத்த பெண் பயிற்சியாளரை பலாத்காரம் செய்து குற்றச்சாட்டில் சிக்கியதால் அமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார்*

- *குஜராத் கலவரத்தில் கூட்டு பலாத்காரம் செய்து கொல்லப்பட்ட பில்கிஸ் பானு வழக்கில் தண்டிக்கப்பட்ட அனைவரையும் குஜராத் பாஜக அரசு முன் விடுதலை செய்தது.*

- *உத்தர பிரதேச தில்ஹார் தொகுதி பாஜக எம்எல்ஏவாக இருந்த ரோஷன் லால் வர்மாவின் மகன் மனோஜ் வர்மா, தன்னை கடத்தி பாலியல் பலாத்காரம் செய்ததாக இளம் பெண் புகார் கூறியிருந்தார்*

- *கர்நாடகத்தில் நீர் பாசன துறை அமைச்சராக இருந்த ரமேஷ் ஜார்கிகோளி, இளம் பெண்ணுடன் ஆபாசமாக இருப்பது போன்று வீடியோ வெளியானது. இதனால் அவர் அமைச்சர் பதவியை இழந்தார்.*

- *இது போன்று பாஜகவை சேர்ந்தவர்கள் மற்றும் அவரது அபிமானிகள் மீது பல்வேறு பாலியல் குற்றச்சாட்டுகள் உள்ளன.*

- *பாஜகவும் பாலியல் குற்றச்சாட்டுகளும் என்ற தலைப்பில் பாகம் 1,2 என்று புத்தகமே போடலாம்.*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : June 08, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran